# துளபகிரி சோதிடம்

செடி 1 - சமித்து 2 -



உள்ளே :--

5. 11. 88 -ன் சனிமாற்றமும் இடபத்து வியாழன் ஜுலை 89 வரை உள்ள பலன்.

இலங்கையின் இராசி துலாமா? கும்பமா? ஆய்வு.

மேலும் பல சுவையான அம்சங்கள்.

விலை ரூபா: 4. 75

# துளபகிரி ஜோதிடம்
THULLAPAKIRI JOTHIDAM

செடி 1 - சமித்து 2 -

கௌரவ ஆசிரியர்
- கற்கோவளன் -

உள்ளே :--

(1) 5-11-88-ன் சனி மாற்றமும் இடபத்து வியாழனும் உங்கள் பலன்.

(2) திருமணத்துக்கான தடைகள் அகல குழந்தைச் செல்வம் கிடைக்க ராகு அஸ்டோத்திரம்.

(3) இலங்கையின் இராசி துலாமா? கும்பமா? ஆய்வு

(4) சாமுத்ரிகா இலட்சணம் சொல்லும் பலன்.

(5) மெஞ்ஞானமும் விஞ்ஞானமும்.

(6) காணமல் போனவர்களுக்குப் பிதிர்க் கருமம் எப்போது.

(7) குழந்தைகளுக்குச் சூட்டத் தெய்வப் பெயர்கள்.

## மனம் விட்டு ஒருவார்த்தை

எதிர்பார்த்ததை விடக் கூடுதலாகவே உங்கள் ஆதரவு முதலாவது சமித்திற்குக் கிடைத்திருக்கிறது.

'' அடுத்த இதழ் எப்போது வெளிவரும் '' என்ற வெளிப்படையான சிலரின் எதிர்பார்ப்புக்கள், துளபகிரி சோதிடம் மென்மேலும் வளர்ச்சி பெறவேண்டும் என்று சிலர் அனுப்பிவைத்த இதய சுத்தியான வாழ்த்துக்கள், அனைத்தும் எம்மை மேலும் ஊக்குவிக்கின்றன.

உங்கள் அறிவுரைகளையும் கருத்துரைகளையும் மனப்பூர்வமாக் ஏற்றுக் கொள்கின்றோம்.

அவைகள் ஒன்றிற் கொன்று முரணாக இருக்கும் போது ஏதாவது ஒன்றைத்தனே செயற்படுத்த முடிகின்றது?

'' மற்றைய விடயங்களை ஒதுக்கிவிட்டு அவ்வப்போது சனி மாற்றம் வியாழ மாற்றம் என்ற வி-யத்தைமட்டும் சற்று விரிவுபடுத்தி, விலையையும் சற்றுக் குறைத்து வெளியிட்டால் நல்லது

இது வர்த்தக ரீதியாகச் சிந்திக்கும் ஒருவரின் கருத்து.

இச் சஞ்சிகையில் உள்ள விடயங்கள் போதாது. மேலும் பல விடயங்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

இது அறிவியல் ரீதியாகச் சிந்திக்கும் ஒருசிலரின் அறிவுரை.

முன்னையவரின் ஆவலைப் பூர்த்திபண்ண பல வெளியீடுகள் உள்ளன. வியாழ மாற்றம், சனி மாற்றம் அவ்வளவே சோதிடம் என்று நாம் எண்ணுகின்ற வரையில் ஈழத்தில் தரமான சோதிட சஞ்சிகைகள் வெளிவருவது சாத்தியமானதல்ல.

பின்னையவரின் கருத்துரையை ஏற்றுக் கொண்டுள்ளேன். விளைவு 2வது சமித்து மேலும் புதிய அம்சங்களுடன், உருவத்திலும் மாற்றமடைந்து வெளிவருகின்றது.

வாழ்த்துக்களையும், அறிவுரைகளையும் மட்டும்தான் அனுப்பவேண்டும் என்றில்லை. கண்டனங்களையும், விமர்சனங்களையும் அனுப்பிவையுங்கள். அதுதான் எமக்கு மிகவும் விருப்பம்.

# சாமுத்திரிகா லட்சணம் சொல்லும் பலன்

அங்க அமைப்பு ஒரு மனிதனுடைய தோற்றத்திற்கு எழில் ஊட்டுவது மட்டுமல்ல, பயன் சேர்ப்பதுடன் அவனது உள் உணர்வுகளுக்கும் விளக்கம் தருவதாக இருக்கிறது. ஆனால் ஒரே அமைப்பு பெண்களுக்கு ஒரு பலனையும் ஆண்களுக்கு வேறு பலனையும் தருகிறது.

அந்த வகையில் மாதம் இரு சாமுத்திரிகா இலட்சணத்தின் பலன் இங்கே சொல்லப்படுகின்றன.

## மூக்கில் மச்சம்

இவர்கள் முன் கோபிகளாக இருப்பர். ஒரு வகையான சிடுசிடுப்பான சுபாவமும் இருக்கும்.

### ஆண்களானால்

குடும்பத்தில் மனைவி மக்களுடன் ஒருவித கெடுபிடி மனப்பான்மையுடன் பழகுவார்கள். வெளித்தோற்றத்தில் அவ்வாறு இருப்பினும் மிகவும் இளகிய மனம் படைத்தவர்கள். மனைவி மக்களிடம் அளவுக்கு மீறிய பாச உணர்வு இவர்கள் மனதில் அடங்கிக் கிடக்கும். வாழ்க்கையை எப்போதும் சுவைத்து அனுபவிக்க வேண்டும் என்பது இவர்கள் நோக்கமாக இருக்கும். வாழ்க்கையில் இவர்கள் படிப்படியாக உயர் நிலை அடைவார்கள்.

### பெண்களானால்

இவர்கள் சேவா மனப்பான்மை பெற்றுத் திகழ்வர். அணிகலன்களில் இவர்களுக்கு விருப்பம் இருக்காது. சிலருக்குத் திருமண விருப்பம் கூட இல்லாமல் இருப்பது விதி முறையாகும். சுருங்கக் கூறின் ஒரு சந்நியாசியைப் போல இவர்கள் வாழக்கூடும்.

ஆனால் ஆண்களாயினும், பெண்களாயினும் மூக்கிலே உள்ள மச்சம் மூக்கின் நுனி தவிர்ந்த வேறு எந்த இடத்திலே மச்சம் இருந்தாலும் அது பொறுப்புக் குறைந்த இயல்பின் நிலையை விளக்குவதாகவே இருக்கும். எந்தவித இலட்சிய நோக்கும் இல்லாமல் ஏதோ வாழ்ந்தால் போதும் என்று இவர்கள் காலம் கடத்துவார்கள்.

## உருண்டை முகம்

இவ்வமைப்பு ஒரு ஆணுக்கு அமையப் பெறின் அவன் மிகுந்த சீலம் உடையவனாக இருப்பான். ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையைப் பெற்றிருப்பான். வாழ்க்கையை மிகுந்த எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் நடத்துவான். பூஜை, விரதங்கள் போன்றவற்றில் நல்ல ஈடுபாடு காணப்படும். நல்ல கல்வி ஞானம் எளிதாகக் கிட்டும்,

பொருளாதார நிலையில் மிக உயர்ந்த நிலைக்கு வருவதற்கு வாய்ப்பில்லை என்றாலும் ஓர் இலட்சிய புருஷனாகத் திகழ்ந்து பிறரின் புகழ்வுக்கு ஆளாவான்.

இத்தகைய அமைப்புப் பெற்றவர்களுக்கு இருபதாவது வயதிலும் முப்பத்தைந்தாவது வயதிலும் நாற்பதாவது வயதிலும் எதிர்பாராத நன்மைதரும் சூழ்நிலை அமையும்.

### பெண்களானால்

இவ் உருண்டை வடிவமான அமைப்பு ஓர் பெண் பெற்றிருப்பாளானால் அவள் ஓர் இலட்சியப் பெண்ணாகத் திகழ்வாள். உயர்ந்த மனோபாவத்துடனும் சிறந்த குண இயல்புடனும் விளங்குவாள். ஆழ்ந்த நம்பிக்கையும் தெய்வபக்தியும் இவளுடைய இயல்புடனும் ஒட்டியதாக இருக்கும்.

தோற்றத்தில் மிகவும் அடக்கமாகக் காணப்பட்டாலும் தீமைச் சூழ்நிலை ஏற்படும் போது பெண் புலியாக மாறி கடுமையாக போராடப் பின் வாங்க மாட்டாள். பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலும் இவளுடைய இராசி காரணமாகச் செல்வம் கொழிக்கும். புகுந்தவீட்டில் கணவனுக்கு ஏற்படுகின்ற நல்வாழ்வுக்கு எல்லாம் இவளுடைய அதிர்ஷ்ட இராசியே காரணமாக இருக்கும்.

நன் மக்கள் பலர் இவளுக்குப் பிறப்பார்கள். குழந்தைகள் பெற்றோர்க்குப் பெருமை சேர்க்கும் இயல்புடையதாக இருப்பார்கள்.

மிக இளவயதில் பதினேழுவயதிற்குள் திருமணம் நடைபெற வேண்டும் தவறினால் காலம் எடுக்கும். குடும்ப வாழ்க்கை சிறப்பாக இருக்கும்.

(ஆதாரம் சாமுத்திரிகா லட்சணம்)

# சனிமாற்றமும் இடபத்துவியாழனும் 5 - 11 - 88 முதல் 2 - 7 - 1989 வரை உங்கள் பலன்

> சோதிடர்கள் பலன் சொல்லுகின்றபோது திசா புத்தி, ஜாதக அமைப்பு என்பனவற்றை முக்கால் பங்கும் கோசார பலனைக் கால் பங்குமே கணக்குக்கு எடுப்பர். எனவே பலன்களைப் படிக்கு முன் இதனைச் சிந்தித்தல் நலம்.

4 - 6 - 1988ல் வக்கிரகதியில் விருச்சிக இராசிக்குச் சென்ற சனீஸ்வரன் 5 - 11 - 1988ம் தேதி 18 நாடி 51 விநாடிக்கு மீண்டும் தனுராசிக்குச் செல்கின்றார்

20 – 6 – 1988ல் இடப இராசிக்குச் சென்ற வியாழபகவான் 1989 ஜூலை மாதம் வரை இடப இராசியிலேயே இருப்பார்.

கோசார நிலையில் வியாழன், சனிக்கிரகங்களே கூடிய தாக்கங்களை ஏற்படுத்துவாராகையினால் விருச்சிகராசி சனீஸ்வரன். இடபராசி வியாழன் என்ற நிலையில் வைத்து உங்கள் பலன் சொல்லப்படுகின்றது.

உங்கள் திசாபுத்தி, ஜாதக அமைப்பு என்பனவற்றைப் பொறுத்து பலன்கள் மாறுபடவோ, அல்லது மேலும் தீவிரமடையவோ வழி உண்டு

(மேலதிக விபரங்களுக்கு முந்திய இதழ் சமித்து ஒன்றைப் பார்க்கலாம்)

## மேடம்

**(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம் வரை)**

நவம்பர் 5ம் தேதியின் பின், உங்களுக்கு இதுவரை நடைபெற்றுவந்த 7½ சனி நீங்குகின்றது. 89ஜூலை வரைவியாழபகவானும் 2ம் வீட்டிலேயே இருக்கின்றார். இதனால் இது வரை இருந்துவந்த அலைச்சல் பொருள் இழப்பு இனசன விரோதம் மாணவர்களுக்குக் கல்வியில் இருந்து வந்த தடைகள், பெண்களுக்குக் குடும்பத்தில் இருந்துவந்த விரோத மனப்பான்மைகள் ஆண் பெண் இருபாலாருக்கும் திருமண விடயத்தில் இருந்துவந்த தடைகள், வேலைவாய்ப்புப் பெறுவதில் இருந்த இடர்ப்பாடுகள் வெளிநாட்டுப் பிரயாண முயற்சியில் இருந்துவந்த சிக்கல்கள் என்பன நீங்கிப் பல வகையிலும் நன்மை உண்டாகும் காலம் ஆரம்பித்துள்ளது.

தொழிலில் மாற்றம், முன்னேற்றம் உண்டாகும். மாணவர்கள் கல்வியிலே முன்னேற்றம் பெறுவர். தொழிற்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கிட்டும். எனினும் வெளிநாட்டுப் பிரயாணங்கள் பெருமளவிற்கு நன்மையையோ, வாகனம், காணி, பூமி, சம்பந்தமான பிரச்சினைகள் எதிர்பார்க்கும் அளவிற்கு நன்மையையோ உண்டுபண்ணாது. கொடுக்கல் வாங்கல் விடயங்களில் கூடிய நிதானம் வேண்டும் இல்லையேல் வீண் கெட்ட பெயர்களைக் கேட்க வேண்டியேற்படலாம். குடும்பத்தில் உள்ளவர்களிடையே சிறிதளவு நோய் ஏற்படினும் உடன் சிகிச்சைகள் செய்து கொள்ளல் வேண்டும். வீட்டில் மங்களகரமான சம்பவங்கள் இடம் பெறும். குடும்பத்தில் புதிய ஜீவன் ஒன்று தோன்றும். ஸ்தலயாத்திரைகள் உண்டாகும்.

## இடபம்

**(கார்த்திகை 2, 3, 4ம் பாதங்கள் ரோகிணி மிருகசீருடம் 1ம், 2ம் பாதங்கள்)**

உங்களுக்கு நவம்பர் 5ம் தேதியின் பின் அட்டமத்துச் சனி ஆரம்பிக்கின்றது. போதாதற்குச்சென்மத்து வியாழன் வீண்பிரச்சினைகளில் வலியப்போய் மாட்டிக் கொள்ளாதீர்கள். இயல்பிலேயே தெய்வ நம்பிக்கை உள்ளவராகையினால் இயன்றவரை வியாழன் சனி கிரக வழிபாட்டில் ஈடுபடுங்கள். காலம்

பொன்னானது என்று தீவிர முயற்சிகளில் இறங்குவதை ஜுலை 89 வரை ஒத்திப் போடுங்கள். இக்காலத்தில் உங்களால் எதிரிகளை வெல்ல முடியாது. அவமானப்படவேண்டியே ஏற்படலாம். பொறுமையாக இருங்கள். உங்கள் திசாபுத்தி பலன்களையும் ஒரு முறை சரி பார்த்துக் கொள்ளுங்கள். வெளிநாட்டுப் பிரயாணங்கள் நன்மையை உண்டு பண்ணுது. இந்த இராசிக்குரிய குழந்தைகள் கல்வியில் அக்கறையற்று இருப்பார்கள். எதிர்பார்த்த சித்தி கிட்டவில்லையே என்பதற்காக அவர்களது படிப்பை நிறுத்தி வெளிநாட்டிற்கு அனுப்ப முயற்சிக்க வேண்டாம் ஜுலை 89ன் பின் கல்வி நிலை சிறப்படையும். திசா புத்தியையும் சீராகத்தெரிந்து கொள்ளாமல் பெண்பிள்ளைகளின் திருமண விடயத்தில் தீவிரமாக முயற்சித்து அவமதிப்பிற்கும் ஏமாற்றத்திற்கும் ஆளாகாதீர்கள். ஜுலை 89ல் வியாழன் 2ம் இடத்திற்கு வந்ததும் கஷ்டங்கள் யாவும் நீங்கிவிடும் மனமகிழ்ச்சி உண்டாகும் என்ற மனநிறைவுடன் இருங்கள்; காதலர்கள் தங்கள் நடைமுறையில் எச்சரிக்கையுடன் இருந்துகொள்ளுங்கள்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ம், 4ம் பாதங்கள், திருவாதிரை புனர்பூசம் 1ம் 2ம் 3ம் பாதங்கள்)**

உங்களுக்கு நவம்பர் 5-ம் தேதி முதல் 7ம் இடத்துச்சனி ஆரம்பமாகின்றது. வியாழனும் 12ம் இடத்தில் இருப்பார். இவற்றின் விளைவால் கணவன் மனைவியரிடையே மன ஒற்றுமை காண்பது கஷ்டம். கீரியும், பாம்பும் போன்று ஒரு நிலை தோன்றலாம். உங்களில் மனோசத்தி கூடியவர்கள், தற்போதைய நிலை ஜுலை 89 வரையில் தானே என்று எண்ணிப் பொறுமையாக இருங்கள் தப்பான சிந்தனை உள்ள எதிர்ப் பாலாரின் தொடர்புகள் ஏற்படவும் வாய்ப்புக்கள் உண்டாகும். அதனுல் வீண் பொருட்செலவும் அவமானமுமே மிஞ்சுமாகையினுல் இதனை நன்குணர்ந்து செயற்படவும்; வயிறு சம்பந்தமான நோய் உண்டாகும். பொருட்செலவு, வைத்தியச்செலவு அதிகரிப்பு யோசனை மிகுதி நித்திரைக் குறைவு மாணவர்கள் கல்வியில் முழுமனதுடன் ஈடுபட முடியாத தன்மை வருமானத்தில் பற்றுக்குறை சத்துருக்களால் தொல்லை உத்தியோகத்தர்கள் பதவியைச் சிரமத்துடன் பாதுகாக்க வேண்டிய தன்மை அலைச்சல் என்பன உண்டாகும்.

எனினும் நன்மையான விடயங்களின் பொருட்டுப் பொருட்செலவு செய்யும் தன்மை உண்டாகும். பிள்ளைகளுக்கோ, சகோதரர்களுக்கோ திருமணம் செய்துவைத்தல், அல்லது அதுபோன்ற நன்மையான விடயங்களைச் செய்வதில் பொருட்செலவு செய்ய வேண்டியேற்படும். அரச உத்தியோகத்தர்கள் இயன்ற வரை சக ஊழியர்களுடன் சுமுகமாக நடந்து கொள்வது தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ள உதவும்.

## கடகம்

**( புனர்பூசம் 4ம் பாதம் பூசம், ஆயிலியம்)**

உங்களுக்கு நவம்பர் 5-ம் தேதி முதல் 6ம் இடத்துச் சனி ஆரம்பித்துள்ளமை சிறப்பானதாகும். அத்துடன் வியாழன் 11ம் இடத்தில் இருப்பது மேலும் நன்மையானதாகவே அமைகின்றது. தொட்டதெல்லாம் பொன்னுகும் காலமிது, திசாபுத்தியும் சிறப்பாக அமைந்து விட்டால் நீங்கள் கொடுத்து வைத்தவர் தான். நல்ல சந்தர்ப்பங்கள் எப்போதும் அமைவதில்லை. இக் காலத்தில் மற்றவர்களின் மனத்தைப் புண்படுத்த து நடந்து கொண்டால் மேலும் நன்மைகள் உண்டாகும். பொருளாதார முன்னேற்றம் சம்பந்தமாக எடுக்கும் எந்த முயற்சியிலும் தாராளமாக இறங்கலாம் செல்வம், செல்வாக்கு அதிகரிக்கும். வீடு மனை ஆடை ஆபரண சுகம் உண்டாகும். மனமகிழ்ச்சிகரமான சம்பவங்கள் குடும்பத்தில் இடம் பெறும். தொழில் ஸ்தானத்தில் ஆளுமை அதிகரிக்கும். மேலதிகாரிகள், சக உத்தியோகத்தர்கள் உறவு சுமுக நிலையில் இருக்கும் விரோதிகள் பணிவர் கடன் தொல்லை நீங்கும். பதவி உயர்வு சம்பந்தமாக

முயற்சிக்கும் போது வெற்றி கிட்டும். பரீட்சைகள் நல்ல முடிவைக் கொடுக்கும் மாணவர்களுக்குக் கல்வியிலே சிறப்பான காலமாகும். ஆசிரியர்கள், பெற்றோர் நண்பர்களால் பாராட்டப் படுவர் வராது எனக் கைவிடப் பட்ட பொருட்கள் திரும்ப வந்து சேரும் வியாபாரம், விவசாயம் வெற்றியைக் கொடுக்கும். திருமணத்திற்கும் தடையாய் இருந்த காரணிகள் அகன்று திருமணம் நடைபெற வாய்ப்புக்கள் உண்டாகும் சமூகத் தொண்டு செய்து புகழ் அடையலாம்

## சிங்கம்

### மகம் பூரம் உத்தரம் 1ம் பாதங்கள்

உங்களுக்கு நவம்பர் 5ம் தேதியின் பின் 5ம் இடத்துச் சனி ஆரம்பமாகின்றது அத்துடன 10ம் இடத்து வியாழனும் நடைபெறுகின்றது

இதனால் தாயாருடன், சகோதரர்களுடன் இருந்து வந்த கருத்து வேற்றுமைகள் அகன்று சுமுக நிலை தோன்றும் நண்பர்கள், மேலதிகாரிகள் ஆகியோரின் மாறுபட்ட மனப்போக்கை எதிர்நோக்க வேண்டியேற்படும். வழக்குகள் எதிரிடையான முடிவையே உண்டுபண்ணும். வரவைவிடச் செலவு அதிகரிக்கும். கடன் தொல்லைகள் கவலையை உண்டு பண்ணும். குடும்பத்தில் ஒரு சில சுப காரியங்கள் இடம் பெற்றாலும் வருந்தத் தக்க சம்பவங்களும் இடம் பெறவே செய்யும். தொழில் ஸ்தாபனத்திலும் மன அமைதி குன்றும். சேவையில் இருந்து தானாகவே இளைப்பாறலாம். தனித் தொழில் செய்வோர் இந்தத் தொழிலை விட்டு வேறு தொழில் செய்தால் நன்மை என்று எண்ணி அதிலும் திருப்த்தியடையாதவராக அலைவர் வீடுமாற்றம் உண்டாகலாம் எனவே 1989 ஜீலை மாதத்தின்பின் சிறப்பான காலம் என்று கருதி அதுவரை புதிய முயற்சிகளில் இருந்து ஒதுங்கிக் கொள்வது நலம் கிரக திசா புத்தி பலன்களை நன்கு ஆராயாமல் வெளிநாட்டுப் பிரயாண முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்வது நலம்.

குழந்தைகளுக்கு நோய் உண்டானால் உடன் சிகிச்சை செய்து கொள்ளவும் பாராமுகமாக இருந்து விட வேண்டாம்.

## கன்னி

### (உத்தரம் 2, 3, 4ம் பாதங்கள் அத்தம் சித்திரை 1ம் 2ம் பாதங்கள்)

உங்களுக்கு நொவம்பர் 5ம் தேதி முதல் 4ம் இடத்துச் சனி ஆரம்பமாகின்றது எனினும் 9ம் இடத்து வியாழன் இருப்பது நன்மையாக அமைகின்றது இவற்றின் விளைவால் செயற்படுத்தும் முதலீடுகளுக்கு உரிய இலாபத்தை ஓரளவு சிரமத்திற்கு மத்தியிலேயே பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும், தொழிற்துறையில் வீண் மனஸ் தாபங்களையும் வேலைப் பழுக்களையும் எதிர் நோக்க வேண்டியேற்படும் தொழிலதிபர்கள் தொழிலாளர்கள் ஒத்துழைப்பைப் பெறுவதில் சிரமப்படுவர். பிரயாணங்கள் அனுகூலமான தன்மையை உண்டு பண்ணும் திருமணமாகாது இருப்பவர்களுக்குத் திருமணம் நடைபெறும். சமூகத்தில் கௌரவம் சிறப்படையும் கடன் தொல்லைகள் குறையும். பொருட் சேர்க்கையும் புதியன கொள்வனவு செய்தலும் உண்டாகும் பெண்களுக்கு ஆடை ஆபரண சுகம் உண்டாகும் குடும்பத்தில் புதிய ஜீவன் உதயமாகலாம் மகாதிசை பலனை நன்கு அறிந்து கொள்ளாமல் வெளிநாட்டுப் பிரயாணத்தில் அதிக பணத்தை ஈடுபடுத்துவது நல்லதல்ல. வாகனம் காணி, பூமி கொள்வனவு விடயத்தில் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும், கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகளில் நிதானமாக நடந்து கொள்ளவும்

## துலாம்
**(சித்திரை 3ம்,4ம் பாதங்கள் சுவாதி 1ம் 2ம் 3ம் பாதங்கள்)**

உங்களுக்கு நவம்பர் 5ம் தேதியின் பின் 3ம் இடத்துச் சனி நடைபெறுகின்றது. இதனால் கடந்த 7 1/2 வருடங்களாக இருந்து வந்த 7 1/2 சனி நீங்கியுள்ளது. இதுவரை நீங்கள் பட்ட கஷ்டங்கள் சொல்ல முடியாது. அத்தனைக் கஷ்டங்கள் யாவும் இத்துடன் நீங்குகின்றது. எனினும் ஜூலை 89 வரை அட்டமத்து வியாழன் சில கஷ்டங்களை ஏற்படுத்தவே செய்வார். இதுவரை இருந்து வந்த விரோதிகள் நண்பராவர். உறவினர்களின் உதவி உண்டாகும். எடுத்த காரியங்கள் வெற்றியைக் கொடுக்கும். செய் தொழில் ஆதாயத்தை உண்டு பண்ணும். ஊதாரித்தனமான செலவுகளுக்கு இனிமேல் இடமிருக்காது. வீண் செலவுகள் குறைந்து நன்மை உண்டாகும். இத்தகைய தன்மைகளை சனீஸ்வரன் வழங்குகின்ற போது அட்டமத்து வியாழனின் தாக்கத்தால் நோயின் பாதிப்பு உண்டாகும். தப்பான எண்ணங்களையும் அடுத்தவனுக்கு குழி பறிக்கும் நோக்கத்தையும் கைவிடுங்கள். எச்சரிக்கையுடனும் பொறுமையுடனும் செயற்படுங்கள் தீவிபத்து, ஆயுதங்களினால் காயங்கள் என்பவற்றினால் இருந்து தப்பிக் கொள்ள முயலுங்கள், நிதானம், பொறுமை என்பனவற்றைக் கடைப்பிடியுங்கள்.

## விருச்சிகம்
**( விசாகம் 4ம் பாதம், அனுசம், கேட்டை )**

உங்களுக்கு 7 1/2 சனியன் நடுக்கூறு முடிவடைந்து கடைக்கூறு ஆரம்பித்துள்ளது எனினும் வியாழ சுகம் இருப்பதால் பாதிப்பு மேலும் குறைகின்றது.

பொருளாதார ரீதியில் படிப்படியாக முன்னேற்றம் உண்டாகும் எனினும் வீண் அலைச்சல் இருக்கவே செய்யும். திருமணத்திற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும். செய்தொழிலில் மாற்றம் ஏற்படலாம். அல்லது பதவிஉயர்வு உண்டாகலாம். கல்வியில் இதுவரை ஊக்கக்குறைவுக்கு காரணமாக இருந்த காரணிகள் படிப்படியாக நீங்கும். மகாதிசைபலனும் சாதகமாக இருந்தால் எதிர்பாராத வகையில் பொருள்வரவும் சொத்துச் சேர்க்கையும் உண்டாகும் பிரிந்து இருந்த தம்பதிகள் ஒன்று சேர்வதற்கான வாய்ப்புக்கள் உண்டாகும். பிள்ளைகளினால் சிறப்பும் மகிழ்ச்சியும் உண்டாகும். எனினும் பொருளாதாரத் தட்டுப்பாடு இருக்கவே செய்யும். கடந்த 2 1/2 வருடங்களில் கடுமையான பாதிப்புக்கு உட்பட்டவராக நீங்கள் இருந்தால் சனீஸ்வரன் தான் எடுத்தவைகளையெல்லாம் திருப்பிக் கொடுக்கத் தொடங்குவார். கொடுக்கல் வாங்கல் விடயத்தில் நிதானமாக நடந்து கொள்ளவும். அல்லாவிடில் வீண் கெட்ட பெயர் கேட்க வேண்டியேற்படலாம். இக்காலத்தில் உங்கள் தொழிலுக்கு எதிர்பார்த்த மதிப்புக் கிடைப்பது கஷ்டமாகவே இருக்கும். அவமதிப்பு அடையவும் நேரிடலாம்.

## தனுசு
**(மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம்)**

இவர்களுக்கு நவம்பர் 5ம் திகதியுடன் 7 1/2 சனியின் நடுக்கூறு ஆரம்பமாகின்றது அத்துடன் 6ம் இடத்து வியாழனும் நடைபெறுகின்றது. இவ்விரு நிலையிலும் நீங்கள் ஜூலை 89 வரை பெரும் சோதனையான காலகட்டத்திற்கு ஆளாகுவீர்கள். நன்மை செய்தாலும் கெட்ட பெயரே மிஞ்சும். அவமதிப்படைய நேரிடும் சிறைப்பயம், இனசனங்களுக்கிடையே மனஸ்தாபம், அரசபயம், கள்வர், அக்கினிபயம், நோயின் பாதிப்பு, எடுத்த கருமங்கள் எதுவும் சாத்திய மில்லாத தன்மைகளை உண்டுபண்ணும். பொருளாதாரத் தட்டுப்பாடுகள் அதிகரிக்கும். மேலும் விரும்பத்தகாத பலன்களை எழுதாது விட்டுவிடுகிறேன். விஷ்ணு, தெட்சணாமூர்த்தி ஆகிய தெய்வங்களை தொடர்ச்சியாக வழிபட்டுவாருங்கள். 89 ஜூலை வரை ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்

கொடுங்கள். ஆமா, அப்படியோ, ஒருகை பார்க்கிறேன் என்ற எண்ணத்தைக் கைவிடுங்கள்.

## மகரம்
### (உத்தராடம் 2 3,4ம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1ம் 2ம் பாதங்கள்)

உங்களுக்கு நவம்பர் 5ம் திகதி முதல் ஏழரைச் சனியின் முதற்கூறு ஆரம்பமாகின்றது, எனினும் 5ம் இடத்து வியாழன் நடைபெறுவது நொந்த உள்ளத்திற்கு ஆறுதல் அளிப்பதாக அமையும். இதனுல் கஷ்டங்கள் அதிகம் ஏற்படாவிடினும் தொழிலுக்கேற்ப ஊதியமின்மை காணப்படும். கொடுக்கல், வாங்கல் விடயங்களில் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியேற்படும். கடன் தொல்லைகள் இருக்கும். பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடிய பேச்சுக்களை தவிர்த்துக் கொள்ளவும். தேகசுகம் ஓரளவு பாதிக்கவே செய்யும். அனுவசிய பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். அருவருப்பான நோயின் பாதிப்புக்கள், கைகாலில் நோய்கள் ஏற்படலாம். தப்பான கருமங்களில் நாட்டம், பொருட்செலவு என்பன உண்டாகும். மகாதிசைப் பலனை உறுதிப்படுத்திக் கொள்ளாவிடத்து வெளிநாட்டுப் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். கூடுமானவரை செய்தொழிலில் முழுக்கவனத்தையும் செலுத்தி பொறுமையுடன் இருந்து வரின் பெரிய இழப்புக்களில் இருந்து விலகிக் கொள்ளலாம்.

## கும்பம்
### (அவிட்டம் 3ம் 4ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1ம், 2ம் 3ம் பாதங்கள்)

நவம்பர் 5ம் திகதி முதல் இச்சாதகருக்கு 11ம்இடத்துச்சனி 4ம்இடத்து வியாழன் என்ற வகையில் பலன்கள் நடைபெறும். இதுவரை தொழில் ஸ்தானத்தில் இருந்துவந்த வேலைப்பழு குறைந்து ஒருவித நிம்மதி உண்டாகும். செய்தொழிலில் கூடுதல் நன்மை ஏற்படும். விரோதிகள் நண்பர்களாகித் தம்மால் இயன்ற உதவிகளை வழங்குவர். மேலதிகாரிகளும் ஆதரவு தருபவர்களாக இருப்பர், ஏதாவது விபத்துக்கள் ஏற்பட்டாலும் அதன்மூலம் பெருமளவு நன்மைகள் ஏற்பட இடம்உண்டு. குடும்பத்தில் உறவினரின் உடல்நிலை பாதிக்கப்படலாம். தாயாரின் மனம் துயருற நடத்தல் அல்லது தாயாரினுல் துயர் என்பன ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு, கல்வி சம்பந்தமாக நல்ல முடிவு உண்டாகும். மாணவர்களுக்கு மேல்படிப்புக்கு வசதி உண்டாகும். ஆண்களானுல் திருமணத்தினுல் பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். பெண்களானுல் மனம் விரும்பத் தகுந்த இடத்தில் திருமணம் நடைபெறும்.

## மீனம்
### (பூரட்டாதி 1ம்பாதம், உத்தரட்டாதி ரேவதி)

உங்களுக்கு நவம்பர் 5ம் தேதிமுதல் சனீஸ்வரன் 10ம் இடத்திற்கு வருகின்றுர். வியாழன் 3ம் இடத்திற்கும் வருகின்றுர்.

இவர்களுக்கு செய்தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். பணத்தட்டுப்பாடு குறையும். ஆனுலும் வரவைவிடச் செலவு அதிகமாகவே இருக்கும். வீண் அலைச்சல், கவலை ஆகியன இருந்தாலும் மனத்தில் ஒருவித நிம்மதி இருக்கும். சொத்து விற்பனையில் எதிர்பார்த்த பலன் கிடைக்காது. பெரியோர்களின் சந்திப்பு. அரசாங்க ஆதரவு முதலியன இட்டும். வெளியூர் பிரயாணங்களில் ஓரளவு இலாபம் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகரிக்கும் உடல் ஆரோக்கியம் குறைவடையும். இளைய சகோதரர்கள் உங்கள் மனம் கோணும் வகையில் நடந்து கொள்வர். காது சம்பந்தமான நோயின் பாதிப்பு உண்டாகும். உறவினர்கள் நண்பர்களிடையே விரோதம் உண்டாகும். எனினும் மனைவி மக்கள் மூலம் மகிழ்ச்சியும் ஆதரவும் கிடைக்கும்.

# எண் சோதிடத்தின் தனித்துவம் எத்தகையது?

எண் சோதிடத்திற்கு இன்று கவர்ச்சியான விளம்பரங்கள் வந்துகொண்டிருக்கின்றன; வாசகர்களும் அக்கவர்ச்சியை நாடிச்சென்று கொண்டிருக்கின்றனர்.

அதற்குக் காரணங்கள் இரண்டு

1) சோதிடக் கலையில் உள்ள நுட்பமான கணித வேலைப்பாடுகள் எதுவுமே எண் சோதிடத்தில் இல்லை;

2) வாழ்க்கையில் முன்னேறுவதற்கு மிக இலகுவான வழியொன்றை அது சொல்லிக் கொடுக்கின்றது.

ஒருவரின் பிறந்த திகதியைச் சொன்னவுடன், அவரது பிறப்பெண், கூட்டெண், பொருத்தமான கல் பொருத்தமான நிறம், அவரது குணம் இவற்றை எண்ணிப் பத்து நிமிடங்களில் சொல்லிமுடித்து விடலாம் ஓரளவு ஞாபக சக்தி இருந்தால் போதும்.

எண்சோதிடப்படி முன்னேறுவதற்கு வழி என்ன என்று கேட்டால்

அ) அதிஷ்டமான இலக்கத்தில் பெயரை மாற்றச் சொல்லலாம்.

ஆ) அதிஷ்டமான கல்லை அணிந்து கொள்ளச் சொல்லலாம்.

இ) அதிஷ்டமான திகதிகளில் கருமங்களைச் செய்யச் சொல்லலாம்.

ஈ) பொருத்தமான நண்பர்களுடன் உறவை ஏற்படுத்திக் கொள்ளச் சொல்லலாம்.

உ) அதிஷ்டமான நிறங்களில் ஆடைகளை அணிந்து கொள்ளச் சொல்லலாம்.

இவ்வாறாக மிகக் குறைந்த சிரமத்துடன் முன்னேற வழி சொல்வதும், பலன் சொல்லும் தன்மையை அடைவதும் எண் சோதிடத்தில் இருப்பதனால் மிக வேகமாக மக்கள் எண் சோதிடத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

ஆனால் குறைந்த சிரமத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய எந்த ஒன்றின் தரமும் அதற்கேற்பவே இருக்கும் என்பது மட்டுமல்ல, சில சமயங்களில் பாரிய பக்க விளைவுகளையும் ஏற்படுத்தி விடலாம்.

எனவே நாம் எண்சோதிடத்தின் பலனைத் தீர்மானிக்கின்றபோது மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

எண் சோதிடத்தில் சொல்லியிருக்கின்றபடி பெயர் எண்களை மாற்றுவது, கற்களை ஆபரணங்களில் பதிப்பது பாரிய பாதிப்புகளையும் ஏற்படுத்தியிருக்கின்றது;

இவற்றையெல்லாம் பட்டுத்தான் தெளிய வேண்டும் என்பதில்லை. பட்டுத் தெளிந்தவர்கள் கண்ட அனுபவம் சோதிடக்கலை எம் இந்து மதத்தின் அளப்பரிய சொத்தாக உள்ளது.

எனவே சோதிடக்கலையின் துணை கொண்டு, குறிப்பிட்ட கிரகம் எமக்கு யோக காரணா, அல்லது அவயோக காரணா பாவியா அல்லது சுபரா என்பதை முதலில் தெரிந்து கொண்ட பின்னரே அவற்றைச் செயற்படுத்த வேண்டும்.

மொத்தத்தில் சோதிடக்கலையின் துணையோடு எண் சோதிடம் செயற்படும் போதுதான் நன்மை உண்டு. அல்லாமல் எண் சோதிடத்திற்கு தனித்தியங்கும் வல்லமை கிடையாது.

உங்களுக்குச் சுபபலனைத் தராத ஒரு கிரகத்திற்கு மேலும் சக்தியை அதிகரித்தால் நீங்களே உங்கள் தாழ்விற்கு வழி வகுக்கின்றவராகின்றீர்கள்.

எனவே எண் சோதிடப்படி உங்கள் வாழ்க்கையில் ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்த விரும்பினால் முதலில் சோதிடர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

(வளரும்)

## ஆய்வுக் களம் - 2

# இலங்கையின் இராசி துலாமா? கும்பமா?

சென்ற இதழின், இவ் ஆய்விலே இலங்கையின் இராசியைக் கும்பம் எனக் கொள்வதில் உள்ள இடர்ப்பாடுகளை எடுத்துக் கூறினேம். வாக்கிய சோதிடர்கள் ஏன் கும்பம் என்று சொல்கின்றனர் என்றும் சொன்னேம்.

முனிவர்கள், பெரியவர்களது வாக்கியங்களை அப்படியே ஏற்றுக் கொள்வது அவர்களது கொள்கை. ஏன்? எப்படி? என்ற கேள்விகளுக்கெல்லாம் அங்கே இடம் இல்லை. "ஏர் ஓர் எம் பாவாய்'' என்பது அவர்களது நிலைப்பாடு. (முதலில் ஏற்றுக்கொள், பின்னர் ஆராய்ந்துபார்)

வாக்கிய சோதிடர்கள் இலங்கையின் இராசியைத் துலாம் என்று சொல்வதற்குக் காரணமான பாடல் கீழே தரப்படுகின்றது. இப்பாடல் கி. பி. 1310ம் ஆண்டளவில் தேனுவரைப் பெருமாள் என்பவரால் இயற்றப்பெற்ற சரசோதி மாலை என்ற நூலிலே இடம் பெற்று வருகின்றது.

''மறியோரை மார்வளவ நாடெருது கருநாடகம்
யாழ் வாய்த்த துண்டி
யுறுகுளிர் சோழஞ்சீயம் பாண்டி கன்னி கேரளமே
யுயர்ந்த – தூக்கங்
குறுகிய சிங்களத் தெறுக்கால் சென்னைநகர்
சிலையவனங் குலவு புல்வா
யறிவலாரியங்கும்பங், கௌசலமீன் பாஞ்சால
மறிந்திடாயே''

அடுத்து இலங்கையின் இராசியைத் துலாம் என்பது நடைமுறைக்கு எவ்வாறு ஒத்துவருகிறது என்பதை ஆராய்வதற்கு முன் ஒரு வார்த்தை,

விதி தன் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு மனிதர்களையே கருவியாகப் பயன்படுத்துகின்றது. அதற்காக அவனது மதியிலேயே தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. கிரகங்களின் அபார சக்திக்கு முன்னுல் மனிதர்கள் எம்மாத்திரம், மனிதர்கள் அதற்குக் கருவியாகி வருகின்றனர்.

ஒரு. நாட்டின் தலைவிதியை மாற்றியமைப்பதற்கு அந்நாட்டின் தலைவர்களின் மதியிலிலேயே மாற்றங்களை, தாக்கங்களை கிரகங்கள் ஏற்படுத்துகின்றன இதற்காக யார் மீதும் குறையோ, நிறையோ சொல்வதைக் சோதிடக்கலை அனுமதிக்கவில்லை. அனைத்தும் விதியின் செயற்பாடே.

இலங்கையின் அரசியல் வரலாற்றைச் சோதிட ரீதியாக ஆராய்வதற்கு பின்வரும் நிகழ்வுகளை அதன் ஆய்வுக்குரிய ஒப்படைகளாகப் பெற்று அவற்றுக்குக் கிரக நிலைகள் எவ்வாறு காரணங்களாய் அமைந்தன என்பதை ஆராய்வோம்.

4 - 2 - 1948ல் இலங்கை சுதந்திரம் பெற்றது.

20 - 8 - 1948ல் நாடாளுமன்றத்தில் இலங்கைப் பிரஜாஉரிமைச்சட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இதனை அமரர் ஜி ஜி. அவர்கள் ஆதரித்ததையொட்டி தமிழ் மக்களிடையே பிளவு தோன்றி தமிழரசுக்கட்சி ஒன்று உதயமானது.

5 - 5 - 1956ல் தனிச்சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது இதனையொட்டி 1958 வரை நடைபெற்ற கசப்பான சம்பவங்கள்.

(அ) ஸ்ரீ எதிர்ப்பியக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
(ஆ) பண்டா - செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்டு கிளித்தெறியப்பட்டது.
(இ) ஜே. ஆர் ஜெயவர்த்தனவின் பாதயாத்திரை.
(ஈ) 1958ல் ஏற்பட்ட இனக் கலவரத்தினுல் தமிழ் மக்கள் கொல்லப்பட்டும் அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டும் வந்தமை.

<u>24 - 12 - 1958ல் இருந்து 1979 வரை</u> இலங்கை அரசுக்கு எதிரான தமிழ் மக்களது போராட்ட நடவடிக்கைகள் எதுவும்முன்னெடுத்துச் செல்ல முடியாதவாறு அவ்வப்போது ஏற்பட்ட இடர்ப்பாடுகள்.

1971 ல் சேகுவரா கலவரம் ஏற்பட்டபோதும் தமிழ் மக்கள் அதனுல் பாதிப்படையாமை.

1972 ல் கொண்டுவரப்பட்ட அரசியல் சீர்திருத்தம் தமிழ் மக்களுக்கு சாத்தியமானதல்லாமல் போனதுடன் சிறுபான்மை இனத்தவருக்கு சாதகமாக இருந்த 29 ஆவது சரத்தும் நீக்கப்பட்டமை.

1977 ல் நடைபெற்ற தேர்தலில் தமழ் மக்களின் தலைமைத்துவத்திற்கு எதிர்க்கட்சித் தலைமை கிடைத்துப் பின்னர் பறிபோனது,

1979 முதல் - 1988 வரை

(அ) இலங்கை அரசுக்கு எதிரான தமிழ் மக்களது போராட்டம் வலுவடைவதற்கு ஏதுவாக அமைந்த சோதிட ரீதியான காரணங்கள்.
(ஆ) 1979ல் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் இன்றுவரை நடைமுறையில் இருப்பது.

23 - 6 - 1983ல் இனப்பிரச்சினை உருவாகி தமிழ் மக்கள் தம் சொந்த நாட்டிலேயும் பிற நாடுகளிலேயும் அகதிகளாக மாறிய அவல நிலை. இவ்வாறுன நிலையில் முற்றிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசு எடுத்துக் கொண்ட எந்த முயற்சியும் பயன் கொடுக்க முடியாமல் போனது.

29 - 7 - 1987ல் இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவானது.

03 - 9 - 1987 ல் மூதூர் உதவி அரசாங்க அதிபர் சுடப்பட்டு முஸ்லிம் தமிழ் மக்கள் மத்தியில் கலவரம் உருவானது.

1 – 10 – 1987ல் இருந்து 4 – 10 – 7987 வரை
இந்த நாட்களில் இலங்கை இராணுவத்திற்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் ஏற்படஇருந்த யுத்த நிலை திடீரென மாற்றமடைந்தமை.

9– 10 –1987 இலங்கை அரசு தான் கைது செய்து தனது பாதுகாப்பில் வைத்திருந்த குமரப்பா புலேந்திரன் ஆகிய 17 போராளிகள் 11 பேர் மரணமடைவதற்குக் காரணமாக இருந்தமை.

10-10-1987ல் இந்திய அமைதிப்படையாளருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமர் ஏற்பட்டு தமிழ்மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாக வேண்டியேற்பட்டமை அந்நிலை இன்று வரை தொடர்ந்து வருவதான் தாற்பரியம்.

இத்தகைய விளைவுகளுக்கெல்லாம் காரணமாக அமைந்த கிரக நிலையை ஒப்படைகளாக வைத்து ஆராய்வதற்கு முன் கீழ்க்காணும் எடுகோள்களைக் கவனிக்க வேண்டும்.

| | |
|---|---|
| **இலங்கை இராசி** | **துலாமெனில்** |
| சிங்கள மக்களின் இராசி | துலாம் |
| இராசி அதிபதி | வெள்ளி |
| உச்சக் கிரகம் | சனி |
| சத்துருஸ்தான இராசி | மீனம் |
| அதன் ஆட்சிக் கிரகம் | வியாளன் |
| சிறுபான்மை இனத்துக்குரிய இராசி | தனு |
| அதன் ஆட்சிக் கிரகம் | வியாழன் |
| **தமிழ் மக்களின் இராசி** | **தனு** ( துலாத்திற்கு 3ம் இடம் ) |
| ஆட்சிக் கிரகம் | வியாழன் |
| சத்துருஸ்தான இராசி | இடபம் |
| அதன் ஆட்சிக் கிரகம் | வெள்ளி |
| உச்சக் கிரகம் | சந்திரன் |
| பெரும்பான்மை இனத்துக்குரிய இராசி! | துலாம் |
| அதன் ஆட்சிக் கிரகம் | வெள்ளி |
| உச்சக் கிரகம் | சனி |

இவற்றை உற்று நோக்குகின்ற போது பின்வருவனவற்றை அவதானிக்க முடிகிறது.

சிங்கள அரசின் சிறுபான்மை இனத்திற்குரிய இராசி அதிபதியும் சிங்கள இனத்தினதும் சிங்கள அரசினதும் சத்துரு ஸ்தானாதிபதியும் ஒரே கிரகமாக, (வியாழனுகவே) உள்ளார். இவற்றின் விளைவால் சிங்கள அரசுக்கும், சிங்கள இனத்திற்கும், சிறுபான்மை இனமான தமிழ் மக்கள் ஆண்டாண்டு காலமாக விரோதிகளாகவே இருந்து வந்துள்ளனர்.

அவ்வாறே

தமிழ் இனத்தின் சத்துரு ஸ்தானாதி பதியும், மூத்தசகோதர ஸ்தானாதிபதியான சிங்கள இனத்தின் இராசி அதிபதியும் ஒரே கிரகமாக( வெள்ளியாக) இருப்பதால் தமிழ் இனத்திற்கு சிங்கள இனமும்,இலங்கை அரசும் ஆண்டாண்டு காலமாக விரோதியாக இருந்து வந்துள்ளன.

இதிலிருந்து நாம் ஒன்றை மட்டும் உணர்ந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. சிங்கள தமிழ் மக்களது உறவானது சிறிதளவும் பொருத்தமற்ற தம்பதிகளது சேர்க்கை போன்றே உள்ளது இவ்விரு இனத்தவரையும் நிரந்தரமாக சேர்த்து வைக்க முயலும் எந்த முயற்சியும் விழலுக்கு இறைத்த நீராகவே முடியும். ஒத்துப் போக முடியாத தம்பதிகளுக்கு விவாகரத்து எவ்வளவு அத்தியாவசியமும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதோ அவ்வாறே, இவ்விரு இனங்களும் பிரிந்து கொள்வது தமிழ் மக்கள், சிங்கள மக்கள் ஆகிய இரு சாராருக்கும், அரசுக்கும் நன்மை பயப்பதாகவே அமையும்.

அல்லாமல் தற்காலிகமாக எடுக்கும் எந்த முயற்சியும் 1957 - 1958ல் இடம் பெற்ற இனக்கலவரம் அடக்கப்பட்டபோது, நீறுபூத்த நெருப்பு என்ற நிலையில் இருந்து அடுத்த 7½ சனியன் சுற்றில் 1979 - 1988வரை பாரிய அறிவுகளை ஏற்படுத்தியது போன்றே அடுத்த 30 ஆண்டுகளின் பின் மீண்டும் அழிவுகள் ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாது போகலாம்.

---

அடுத்த ஆய்வில் 1948 முதல் 1988 வரையான காலங்களில் இடம் பெற்ற சம்பவங்களுக்கு சோதிட ரீதியான காரணங்கள் ஆராயப்படும்.

---

சிங்கள, தமிழ் மக்களது உறவானது சிறிதளவும் பொருத்தமற்ற தம்பதிகளது சேர்க்கை போன்றே உள்ளது. இவ்விரு இனத்தவரையும் நிரந்தரமாக சேர்த்து வைக்க முயலும் எந்த முயற்சியும் விழலுக்கு இறைத்த நீராகவே முடியும்.

ஒத்துப் போக முடியாத தம்பதிகளுக்கு விவாகரத்து எவ்வளவு அத்தியாவசியமும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதோ அவ்வாறே, இவ்விரு இனங்களும் பிரிந்து கொள்வது தமிழ் மக்கள், சிங்கள மக்கள் ஆகிய இரு சாராருக்கும், அரசுக்கும் நன்மை பயப்பதாகவே அமையும்.

அல்லாமல் தற்காலிகமாக எடுக்கும் எந்த முயக்சியும் 1957 - 1958ல் இடம் பெற்ற இனக்கலவரம் அடக்கப்பட்ட போது, நீறுபூத்த நெருப்பு என்ற நிலையில் இருந்து அடுத்த 7 1/2 சனியன் சுற்றில் 1979 - 1988ல் பாரிய அறிவுகளை ஏற்படுத்தியது போன்றே அடுத்த 30 ஆண்டுகளின் பின் மீண்டும் அழிவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது போகலாம்.

# மெய்ஞானமும் விஞ்ஞானமும்

விஞ்ஞானிகள் பல உண்மைகளை அவ்வப்போது வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். புதிதாக அவற்றைத் தாம் கண்டு கொண்டதாகவும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவையனைத்தும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எம் மெஞ்ஞானிகளால் சொல்லப்பட்டவைகள் என்பதை ஏனோ அவர்கள் சொல்லிக்கொள்வதில்லை.

## தாயின் வயிற்றில் கல்வி

தாயின் வயிற்றிலே கருவுற்றிருக்கும் குழந்தைக்கு கல்வி பயிற்றுவிக்கும் ஒரு திட்டத்தை கலிபோர்னியா பல்கலைக்கழகம் நடைமுறைப் படுத்தத் தொடங்கியுள்ளது டாக்டர் ரெனிவேன் என்பவர் இத்திட்டத்தின் தலைவராகச் செயல்படுகின்றார்.

கருவுற்றிருக்கும் தாயின் வயிற்றிலே மெகோபோன் கருவி வைக்கப்பட்டு குறிப்பிட்ட சில வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டும். அது குழந்தையைச் சென்றடையும் இம்மாதிரிப் பிறக்கும் குழந்தைகள் பிறந்த இரண்டு வாரத்திலேயே ஓ.. ஓ... என்றும், மா... மா... என்றும் சொல்லத் தொடங்கிவிடுகின்றன. பிறந்த உடனேயே 50 வார்த்தைகளை நினைவில் வைத்துக்கொள்கின்றன.

இதற்கும் மெஞ்ஞானத்திற்கும் என் தொடர்பு என்று கேட்கிறீர்களா?

இரணியன் மனைவி கருவுற்றிருந்த காலத்தில் நாரதமா முனிவர், கருவில் இருந்த குழந்தை பிரகலாதனுக்கு நாராயண நாமத்தின் மகிமையைச் சொல்லிக்கொடுத்தாரென்றும், அதனையே அக்குழந்தை நன்றாக நினைவில் வைத்திருந்து ''நாராயணாய நமஹ'' என்று சொல்லிக்கொண்டிருந்ததாகவும் புராணக்கதை சொல்கின்றது.

அன்று மெஞ்ஞானிகள் சொன்னார்கள். நாம் அதைப் பொருட்படுத்தவில்லை. இன்று விஞ்ஞானிகள் சொல்கின்றார்கள். மறுப்பின்றி ஏற்றுக்கொள்கிறோம்.

வளரும்

# காணாமல் போனவர்களுக்குப் பிதிர்க் கருமம் எப்போது?

காணாமல் போனவர்களின் கதையை ஒரு வருடத்துடன் முடித்து வைக்கச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அப்படியானால் ஒரு வருடத்திற்குள் அவரின் மரணச் சான்றிதழ் கிடைத்து விடும்; அவர் இறந்தவராகக் கணிக்கப்பட்டு விடுவார்.

சட்டப்படி காணாமல் போய் ஒரு வருடத்தில் இறந்தவராகக் கணிக்கப்படுபவருக்கு சாஸ்திரப்படி பிதிர்கருமம் எப்போது செய்வது?

கண்டோம், கேட்டோம் என்று இல்லாத நிலையில், ஒருவர் காணாமல் போய்விட்டால் 7 வருடங்களின் பின் அவருக்குப் பிதிர்கருமங்கள் செய்யலாம். இதைத்தான் சோதிடம் சொல்கின்றது.

அதைத்தான் அன்று சட்டமும் 7 வருடம் என்று சொன்னது.

இன்று சட்டம் வேறு, சாஸ்திரம் வேறு.

(வளரும்)

# திருமணத்திற்கான தடைகள் அகல குழந்தைச்செல்வம் இடைக்க, ஸ்ரீ ராகு அஷ்டோத்திர ஸதநாமாவழி



ஒருவருக்கு திருமணம் நடைபெறுவதில் தாமதம் ஏற்பட்டால் அதற்குச் செவ்வாய் குற்றமே காரணம் என்று எங்களிற் பலர் கொல்லிக்கொண்டிருக்கின்றோம்.

ஆனால் நடைமுறையில் செல்வாய் குற்றத்தால் திருமணம் தடைப்படுவது மிக மிக குறைவாகவே உள்ளது, அவரவர் கிரக நிலேயில் களத்திரஸ்தானதிபதி மறைவிடங்களில் இருப்பதும், பலவீன முற்று இருப்பதும் பாவிகளான இராகு, கேது, சனி கிரகங்களின் சேர்க்கை பெற்றிருப்பதுமே காரணமாகும்.

துர்க்கை அம்மனே வழிபடுகின்றவர்களுக்கு விரைவில் திருமணம் நடைறுெவதாகச் சொல்லப்படுகின்றது. அது முற்றிலும் உண்மையே ஆனல் துர்க்கை அம்மன் செவ்வாய் தோகத்லை நீக்குகின்றூர் என்பதை விட திருமணத்திற்குத் தடையாக உள்ள இராகு தோசத்தை நீக்குகின்றூர் என்பதே மிகப் பொருத்தமானதாகஇருக்கும்.

ஒவ்வொரு தெய்வங்களுமே கிரகங்களாக மாறி எமசகுப் பலன்களே விளேவிக்கின்றன இதனேயே சோதிடக்கலே சொல்கிறது இராகுவிற்கு உரிய தெய்வம் துர்க்கை இராகுகால நோத்தில் துர்க்கை அம்மன் ஆலயத்தில் வழ்பாடு செய்வதும், ஸ்ரீராகு அஸ்டோத்திர சத நாமாவளியைப் பாராயணம் பண்ணுவதும்.

திருமணத்திற்கான தடைசளே அகற்றும் நாகதோசத்தால் குழந்வைப் பேறு இல்லாதவர்களுக்குச் சந்ததிப் பேற்றை அளிக்கும்'

பக்திசிரத்தையுடன் இதனே ஜெபித்தல் வேண்டும். இராகு காலநேரத்தில் வழிபடுவதே அதிக சக்தியைக் கொடுக்கும்.

ஓம் ராஹுமூர்த்தயே நம:
ஓம் ஸைம்ஹிகேயாய நம:
ஓம் விதுந்துதாய நம;
ஓம் ஸுரசத்ரதே நம:
ஓம் தமஸே நம:
ஓம் பணிநே நம:
ஓம் கார்க்யாய நாய நம:
ஓம் ஸராரயே நம:
ஓம் நீலஜீமுதஸங்காசாய நம:
ஓம் சதுர்ப்புஜாய நம:
ஓம் கட்ககேடகதாரிணே நம:
ஓம் வரதாயகஹஸ்தாய நம:
ஓம் சூலாயுதாய நம:
ஓம் மேகவர்ணய நம:
ஓம் க்ருஷ்ணத்வஜ பதாகவதே நம,
ஓம் தக்ஷிணசாமுக்ரதாய நம:
ஓம் தீக்ஷ்ணதம்ஷ்ட்ரா கராளகாய நம:
ஓம் சூர்பாகாராஸ நஸ்த்தாய நம:
ஓம் கோமேதாபரண ப்ரியாய நம:
ஓம் மாஷப்ரியாய நம:
ஓம் காச்யபர்ஷிநந்தநாய நம:
ஓம் புஜகேச்வராய நம:
ஓம் உல்காபாதயித்ரே நம:
ஓம் சூலிநே நம:
ஓம் நிதிபாய நம:
ஓம் க்ருஷ்ணஸர்பாஜே நம:
ஓம் விஷஜ்வாலா வருதாஸ்யாய நம:
ஓம் அர்த்தசரீராய நம:
ஓம் சாத்ரவப்ரதாய நம:

ஓம் ரவீந்துபீகராய நம:
ஓம் சாயாஸ்வரூபிணே நம:
ஓம் சடிநாங்ககாய நம:
ஓம் த்விஷச்சக்ரச்
சேதகாய நம:
ஓம் கராளாஸ்யாய நம:
ஓம் பயங்கராய நம:
ஓம் க்ரூரகர்மணே நம:
ஓம் தமோரூபாய நம:
ஓம் ச்யாமாத்மநே நம;
ஓம் நிலலே ஹிதாய நம:
ஓம் கிரீடிநே நம:
ஓம் நீலவஸநாய நம:
ஓம் சநிஸாமந்த
வர்த்மகாய நம:
ஓம் சண்டாலவர்ணாய நம:
ஓம் அச்வ்யருக்ஷபவாய நம:
ஓம் மேஷபவாய நம:
ஓம் சநிவத்பலதாய நம:
ஓம் சூராய நம;
ஓம் அபஸவ்யகதயே நம:
ஓம் உபராககராய நம:
ஓம் ஸோமஸூர்யஸ்சவி
விமர்தகாய நம:
ஓம் நீலபுஷ்பவிஹாராய நம:
ஓம் க்ரஹச்ரேஷ்டாய நம,
ஓம் அஷ்டமக்ரஹாய நம:
ஓம் கபந்தமாத்ரதேஹாயநம:
ஓம் யாதுதாந
குலோத்பவாய நம:
ஓம் கோவிந்த
வரபாத்ராய நம:
ஓம் தேவஜாதி
ப்ரவிஷ்டகாய நம;
ஓம் க்ரூராய நம:
ஓம் கோராய நம:
ஓம் சநேர்மித்ராய நம:

ஓம் சுக்ரமித்ராய நம:
ஓம் அகோசராய நம:
ஓம் மாநே கங்காஸ்நாந
தாத்ரே நம;
ஓம் ஸ்வக்ருஹே
ப்ரபலாட்யதாய நம:
ஓம் ஸத்க்ருஹேந்ய
பலத்ருதே நம,
ஓம் சதுர்த்தே
மாத்ருநாசகாய நம:
ஓம் சந்த்ரயுக்தேசண்டால
ஜாதிஸூசகாய நம:
ஓம் ஸிம்ஹஜந்மநே நம:
ஓம் ராஜ்யதாத்ரே நம:
ஓம் மஹாகாயாய நம;
ஓம் ஜந்மகர்த்ரே நம:
ஓம் விதுரிபவே நம:
ஓம் மாதகாஜ்ஞாநதாய நம:
ஓம் ஜந்மகந்யா
ராஜ்யதாத்ரே நம:
ஓம் ஜந்மஹாநிதாய நம:
ஓம் நவமேபித்ருஹந்த்ரே நம:
ஓம் பஞ்சமே
சோகதாயகாய நம:
ஓம் த்யூநகளத்ர
ஹந்த்ரே நம:
ஓம் ஸப்தமே
கலஹப்ரதாய நம:
ஓம் ஷஷ்டேவித்த
தாத்ரே நம:
ஓம் சதுர்த்தே
வைரதாயகாய நம:
ஓம் நவமபாபதாத்ரே நம:
ஓம் தசமேசோகதா
யகாய நம:
ஓம் ஆதௌயச
ப்ரதாத்ரே நம:
ஓம் அந்தேவைர
ப்ரதாயகாய நம:

ஓம் கலாத்மநே நம:
ஓம் கோசரசராய நம:
ஓம் தநே ககுத்ப்ரதாய நம:
ஓம் மஞ்சகேதிஷுணு
ச்ருங்கதாய நம:
ஓம் ஸ்வர்பாநவே நம:
ஓம் பலிநே நம:
ஓம் மஹாஸௌக்ய
ப்ரதாயிநே நம:
ஓம் சந்த்ரவைரிணே நம:
ஓம் சாச்வதாய நம:
ஓம் ஸுரசத்ரவே நம:
ஓம் பாபக்ரஹாய நம:
ஓம் சாம்பவாய நம:
ஓம் பூஜ்பகாய நம:
ஓம் பாடீரபூரணாய நம:
ஓம் பைடீநஸகுலோத்
பவாய நம:
ஒய் பக்தரக்ஷாய நம:
ஓம் ஸர்வாபீஷ்டபல
ப்ரதாய நம:
ஓம் தீர்க்காய நம:
ஓம் க்ருஷ்ணாய நம:
ஓம் அதநவே நம:
ஓம் விஷ்ணுநேத்ராரயே நம:
ஓம் தேவாய நம:
ஓம் தானவாய நம:

ராகு அஷ்டோத்திர
சதநாமாவளி சம்பூர்ணம்



# குழந்தைகளுக்குச் சூட்ட தெய்வப் பெயர்களைத் தெரிவு செய்யலாம்

நாம் இன்று அர்த்தமற்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். காரணம் எமது செய்கைகளில் எதுவும் அர்த்தம் இருப்பதாகத் தெரியவில்லை. எமது ஆயுட் காலத்தில் நாம் இதுவரை எத்தனை நாட்களை இழந்து விட்டோம். இனனும் எத்தனை நாட்களுக்கு உயிருடன் இருக்கப் போகின்றோம் இதுவரை அர்த்தமுள்ள எதையாவது சாதித்திருக்கின்றோமா.

''என்ன சொல்கின்றீர், நான் இதற்கிடையில் திருமணமாகி நான்கு குழந்தைகளுக்குத் தந்தையாகியிருக்கிறேன். இதல் எதுவித அர்த்தமும் இல்லை யென்று நினைக்கிறீரா'' நீங்களல்ல, உங்களில் சிலர் அப்படிக் கேட்க நினைக்கிறார்கள்.

அவர்களைத் தான் கேட்கின்றேன். அவர்கள் பெற்ற குழந்தைகளுக்காவது அர்த்தமுள்ள பெயரை வைத்திருக்கிறார்களா?

இல்லையென்று தான் நான் சொல்வேன். சந்தேகமாக இருந்தால் நீங்களே அவர்கள் குழந்தைகளின் பெயர்களை ஒரு முறை உச்சரித்துப் பாருங்கள்.

ஏதாவது அர்த்தம் தெரிகிறதா?
நான் என் குழந்தைகளுக்கு அர்த்தமுள்ள அழகான பெயரைத் தானே வைத்திருக்கிறேன் என்று சொல்கிறீர்களா

மன்னித்துக் கொள்ளுங்கள். நான் உங்களைச் சொல்லவில்லை. தாங்களும் அர்த்தமில்லாமல் வாழ்ந்து, தங்கள் குழந்தைகளையும் அர்த்தமில்லாதவர்களாக்கும். அர்த்தமற்ற பெயர் வைத்திருப்பவர்களைத் தான் சொல்லுகின்றேன்.

அவர்களிலும் குற்றமில்லை. நாகரிக மோகம் அவர்களை அப்படிச் சிந்திக்க வைத்திருக்கிறது.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை, நீங்கள் பின்பற்றும் ஆங்கிலேயர்கள் இருக்கிறார்களே அவர்கள் நாய்க்குப் பெயர் வைப்பதானாலும் ஏன் நஞ்சுக்குப் பெயர் வைப்பதானாலும் அர்த்தத்துடன் வைப்பார்கள்.

நீங்கள் மட்டும் உங்கள் குழந்தைகளுக்கு' எம் வருங்காலச் செல்வங்களுக்கு, நாகரீகம் என்று எண்ணிக் கொண்டு அர்த்தமற்ற பெயர்களை வைத்துக் கொண்டிருக்கின்றீர்கள். எதிர்காலத்தில் அவர்களும், உங்களைப் போல் அர்த்தமற்றவர்களாக வாழ வேண்டும் என்பதற்காக.

இன்னும் காலங்கடந்து விட வில்லை. இப்போதாவது உங்கள் குழந்தைகளின் பெயரை அர்த்தமுள்ள தாக்குங்கள். இன்றைய வேகமான உலகத்திலே இதற்கெல்லாம் எனக்கு ஏது நேரம் என்று கேட்கிறீர்களா?

சிரமத்தை விடுங்கள். உங்களைப் போன்றவர்களுக்கு உதவுவதற்குத் தானே நாம் இருக்கின்றோம்.

இதன் கீழ் நாம் தந்துள்ள பெயர்களில் விருப்பமான ஒன்றைத் தெரிவு செய்யுங்கள்.

இதிலே உள்ள பெயர்களில் எதுவுமே உங்களுக்கு விருப்பத்திற்குரியதாக அமையவில்லையா? அப்படியானால் அடுத்த இதழ் வரும் வரை பொறுத்திருங்கள்.

இங்கே உள்ள பெயர்கள் அனைத்தும் இறைவனது பெயர்கள். குழந்தைகளுக்கு

ஏன் இறைவனது பெயரைச் சூட்டக் வேண்டும் என்று கேட்கிறீர்களா?

அ) இறைவனது பெயரில் அர்த்தம் இருக்கும்.

ஆ) பெயரின் அர்த்தத்தில் அந்தக் குழந்தைக்கு ஒரு பெருமை இருக்கும். அதற்கேப்ப வாழ நினைக்கும்.

இ) அதன் வாழ்க்கை சமூகத்திற்கு அது ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

ஈ) ஒவ்வொரு மனிதனும் தெய்வமாக மாற வேண்டும் என்றே எமது இந்துமதம் சொல்கின்றது உங்கள் குழந்தைகள் தெய்வமாக மாற அப்பெயர் வளிவகுக்கும்.

உ) இறந்த ஆன்மாக்கள் அடுத்த பிறவி எடுக்கும்வரை பூமியில் வழக்கில் இருந்த பெயர் தான் இருக்கும் அப்போது இறைவனுக்கும் தன்பெயரில் உள்ள உங்கள் குழந்தைகளைக் கடுமையாகத் தண்டிக்க மனம் வராது

ஊ) இறைவன் நாமத்தைச்சொல்ல சொல்ல துன்பங்கள் அகலும் என்று சொல்வார்கள். அப்படி மற்றவர்களுக்குத் துன்பங்கள் அகல உங்கள் குழந்தையின் பெயர்கள் காரணமாக இருக்கும்.

எ) உருவேறத் திருவேறும் என்பர். உங்கள் குழந்தையை விழித்து மற்றவர்கள் அப்பெயரை உச்சரிக்குந்தோறும் அப் பெயருக்கு உரிய உங்கள் குழந்தைகளில் உருவேற்பட்டு திருவேறும்

பெயரைஉச்சரிப்பதில் இவ்வளவு பெருமை இருக்கிறது என்று பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சோதிடர்கள் மட்டும் சொல்லவில்லை. இந்த நூற்றாண்டில் வந்த எண் சோதிடர்களும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து என்ன? பெயரைத் தெரிவு செய்யுங்கள். இப்பெயர்களில் திருப்தியில்லையா. அடுத்த இதழ் வரும் வரை பொறுத்திருங்கள்.

| | |
|---|---|
| அன்பரசன் | அன்பழகன் |
| அன்புமணி | அறிவழகன் |
| அறவாழி | அரவிந்தன் |
| அனுருத்தன் | அறுமுகன் |
| அவிநாசி | அரங்கன் |
| அம்புஜன் | அச்சுதன் |
| அசோகன் | அனுகூலன் |
| அமுதன் | அண்ணாமலை |
| அசலன் | அகத்தியன் |
| அபிராமன் | அநந்தலோலன் |
| அஜந்தன் | அகிலன் |
| அதிஸ்டன் | அநயாயன் |
| அதோகூஜாயன் | அநாதிநிதநாயன் |
| அதிருபன் | அப்புலிங்கன் |
| அருமைநாயகம் | அக்ருரன் |
| அனந்தரூபன் | ஆதாரன் |
| அம்மெய்யன் | அறிவுடைநம்பி |
| அறங்காவலன் | அமோகயன் |
| அத்வைதன் | அநுக்ரகன் |
| அம்பிகாபதி | அமராபதி |
| அம்பிகை | அம்பாலிகை |
| அஸ்வத்தாமன் | அருளானந்தன் |
| அருணன் | அவிநயன் |
| அபிநயன் | அண்டிரன் |
| அழகன் | அன்பன் |
| அச்சுதன் | அநகன் |
| அறிவன் | அறிதுயிலன் |
| அநந்தசயனன் | அவநியன் |
| அமிர்தகலை | அமராவதி |
| அம்போருகை | அம்பலவாணன் |
| அபராஜிதன் | அதியன் |
| அருந்ததி | அருளாளன் |
| அருணகிரி | அருள்நந்தி |
| அருட்சோதி | அருக்கன் |
| அரிஹரன் | அமலன் |
| அமலன் | அம்பிகைபாகன் |
| அம்பலக்கூத்தன் | அபயன் |
| அர்த்த நாரீஸ்வரன் | அரிஹரபுத்திரன் |
| அஜாதசத்ரு | அரவிந்தை |
| அரம்பை | அரசி |

| | | | |
|---|---|---|---|
| அமிர்தன் | அமுதன் | ஆண்டாள் | ஆஞ்சனேயன் |
| அமுதவல்லி | அபிஷேகன் | ஆறுமுகக்கந்தவேள் | ஆதிபதி |
| அமரேசன் | அமரர்கோன் | ஆவர்த்தனன் | ஆணவன் |
| அபிராமி | அந்திமந்தாரை | ஆண்டவன் | ஆதிதேவன் |
| அமிர்தபக்ஷன் | அவிநாசிநாதன் | ஆத்மன் | ஆத்மபகவான் |
| அம்பலக்கூத்தன் | அன்பர்க்கெழியன் | ஆதிபகவான் | ஆண்டகை |
| அவதாரன் | அமலநாதன் | ஆசாரசீலன் | ஆகமநாதன் |
| ஆதித்தன் | ஆபுத்திரன் | அரவிநன் | ஆவிநாதன் |
| ஆயன் | ஆத்மயோகன் | ஆவிந்தன் | ஆத்மீகன் |
| ஆனந்தன் | ஆனந்த பரிபூரணன் | அற்புதானந்தன் | அற்புதநாதன் |
| ஆபத்பாந்தவன் | ஆதிதேவன் | அற்புதநாயகம் | அற்புதராஜா |
| ஆசாரசிலன் | ஆலிங்கன் | அற்புதவேள் | அற்புதரூபன் |
| ஆரியன் | ஆதிபகவன் | | |

# நவீன உலகில் நாம கரணம்?

அன்பழகன் :-

உன் குழந்தைக்கு என்ன பெயர் வைத்திருக்கிறாய்?

அரவிந்தன் :-

ஜினோஜா.

அன்பழகன் :-

உன் பெயர் அரவிந்தன். உன் மனைவி பெயர் அமிர்தாம்பிகை. ஏன் குழந்தைக்கு ஜினோயா என்று வைத்தாய்.

அரவிந்தன் :-

ஜீ. வரியில் பெயர் வைக்கும்படி சாத்திரியார் சொன்னார். 19 ல் பெயர் வைக்கும் படி எண் சோதிடர் சொன்னார். இந்தப் பெயர் தான் என் மனைவிக்குப் பிடித்திருந்தது.

அன்பழகன் :-

? ? ?

( நவீன உலகில் நாம கரணம் )

# SHABRA

## UNICO *finance* LIMITED

### மும்முனை வட்டித் திட்டங்கள்

நிலையான வைப்பு /TERM DEPOSIT

| காலம் | மாதாந்த வட்டி வீதம் | முதிர்ச்சியில் வட்டி வீதம் |
|---|---|---|
| 03 மாதம் | - | 15% |
| 06 ,, | 15% | 17% |
| 12 ,, | 18% | 20% |
| 24 ,, | 21% | 23% |
| 36 ,, | 22% | 24% |

முதலீட்டுச் சேமிப்புத்திட்டம்.

இன்றே! வளமான எதிர்காலத்திற்கு நாடுங்கள்

**SHABRA**
**UNICO *finance* LTD.**

61, நியூபுல்லர்ஸ் வீதி
கொழும்பு.

207, மின்சார நிலையவீதி
யாழ்ப்பாணம்.

அருண் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்.